திரு. ஆர். கருப்பையா: தலைவர் அவர்களே, பல தொழிற் சாலைகளிலே கரும்பு வெட்டியதற்கு 10 ரூபாய் அட்வான்ஸாகக் கொடுத்தார்கள். வெட்டுக்கூலி, வண்டிவாடகைப் பணம் இன்னும் கொடுக்கப்படவில்லை. விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இதுபோன்ற சிக்கல்கள் அடுத்த ஆண்டிலேகூட வரலாம், எனவே இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, விவசாய இயக்குநர் ஆலைச் சொந்தக்காரர்களோடு பேசி விரை விலே கரும்பு உற்பத்தியாளர்களுக்குப் பணத்தைக் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அரசினர் தீர்மானம்.

பொதுக்கணக்காய்வுக் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டப் பேரவையின் 173 (4)வது விதியின் கீழ் 1970–71 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்காய்வுக் குழுவில் திரு. கே. எம். இராமசாமிக் கவுண்டர் அவர்களின் மறைவினால் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்புவதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் நிச்சயிக்கும் நாளன்று இப்பேரவை ஓர் உறுப் பினரைத் தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ் பொதுக்கணக்காய்வுக் குழுவிற்கு ஓர் உறுப் பினரைத் தேர்ந்தெடுப்படுவதற்கு, வேட்பாளர்கள் நியமனத் தாள் களை 3—9—1970 வியாழக்கிழமை காலை 11 மணிக்குள் செயலாள ரிடம் சேர்ப்பிக்கவேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 3—9—1970 வியாழக்கிழமை மாலை 3 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 5—9—1970 சனிக்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

1970 செப்டம்பர் 2]

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப் படவேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது ஒன்றுக்கு மேற்படுமாயின் 7—9—1970 திங்கட்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே வாக்கெடுப்பு நடைபெறும்.

(ஈ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1970-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) மசோதாவை பேரவைமுன் அறிமுகம் செய்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

6. அரசினர் மசோதாக்கள்.

(அ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு சம்பளம் வழங்குதல் (திருத்த) மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இம்மசோதாவைப் பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மசோதா அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள்கள் அங்காடிகள் (திருத்தம்–தீர்வை செல்திறன் ஆக்குதல்) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1970-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள்கள் அங்காடிகள் (திருத்தம்–தீர்வை செல்திறன்) மசோதாவை பேரவைமுன் அறிமுகம் செய்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிறார்கள்.

6. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு வேளாண்மை விளைபொருள்கள் அங்காடிகள் (திருத்தம்–தீர்வை செல்திறன் ஆக்குதல்) மசோதா.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1970-ம் ஆண்டு வேளாண்மை விளை பொருள்கள் அங்காடிகள் (திருத்தம்–தீர்வை செல்திறன் ஆக்குதல்) மசோதாவை இப்பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.